DEPOSITION OF WITNESS
(Chapter XXIII of Code of Criminal Procedure)
IN THE COURT OF SESSIONS JUDGE OF THE NILGIRIS
AT UDHAGAMANDALAM

| | | |
|---|---|---|
| **Sessions .. ..** | **:** | **S.C.No. 50 of 2017** |
| **Deposition of witness for** | **:** | **PW- 7 (L.W- 7)** |
| **Name** | **:** | **திரு. ரவி** |
| **Father's/Husband Name** | **:** | |
| **Age** | **:** | |
| **Address** | **:** | |
| | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873**

**<u>17.07.2023</u>**

A1, A2, A3 Present.

**முதல் விசாரணை**

நான் தற்போது குன்னூர் போக்குவரத்து காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 04.03.2016-ம் தேதி மேல்குன்னூர் காவல் நிலைய குற்ற எண் 37/2016 பிரிவு 397 வழக்கில் கண்ட எதிரியை தேடி ஆய்வாளர், குன்னூர் நகர காவல் நிலையம், பொறுப்பு மேல்குன்னூர் காவல் ஆய்வாளர் சிவக்குமார் அவருடன் நானும் தலைமைக்காவலர் 763 சிவக்குமார் ஆகியோர் கரன்சி டால்பின் நோஸ், லேம்ஸ் ராக், ஆர்டலி, சிம்ஸ் பார்க் ஆகிய இடங்களை கண்காணித்து கொண்டிருக்கும் போது 05.03.2016-ம் தேதி காலை 4 மணிக்கு பிரபு (எ) சலீம் என்பவர் ஐயப்பன் காலனியில் இருந்து ஓடமலை வண்டிச்சோலை வழியாக நடந்து செல்வதாக கிடைத்த தகவலை பெற்று

வண்டிச்சோலைசந்திப்பு சென்று அந்த வழியாக நடந்து வந்தவரை தகவலாளி தகவல் கொடுக்க அவரை பிடித்து ஆய்வாளர் திரு. சிவக்குமார் விசாரிக்க அவர் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதன் பேரில் அவர் கைது செய்யப்பட்டார். பின்பு அவர் தன்னிடம் இருந்த 1000 ரூபாய் நோட்டு 1, சிறிய கத்தி ஒன்று, 24 போலி 500 ரூபாய் நோட்டுகள் ஆகியவற்றை எடுத்து ஆஜர்படுத்தினார் அதை ஆய்வாளர் சாட்சிகள் கில்பெர்ட் ராய், கிராம நிர்வாக அதிகாரி, மகேந்திரன் ஆகியோர் முன்னிலையில் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார். அந்த 24 போலி 500 ரூபாய் நோட்டுகள் என்னிடம் காட்டப்படுவதுதான் அது அசாஆ 18 வரிசை எண்ணிக்கை 24 ஆகும். கைப்பற்றப்பட்ட கத்தி சாபொ11 ஆகும். கைப்பற்றப்பட்ட 1000 ரூபாய் நோட்டு ஏற்கனவே சாபொ1-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

பிரபு என்ற சலிம் என்பவர் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் பொட்டானிக்கல் கார்டனில் போட்டோ எடுக்கும் வேலை செய்யும் ஊட்டி, ஆரணி அவுசில் குடியிருக்கும் ரவி என்பவரை 08.30 மணிக்கு எதிரி பிரபு என்ற சலிம் என்பவர் அடையாளம் காட்ட ரவியை கைது செய்து விசாரிக்க ரவி தன்னிடம் இருந்த 25 போலி 500 ரூபாய் நோட்டுகளை சாட்சிகள் கில்பெர்ட் ராய், மகேந்திரன் ஆகியோர் முன்னிலையில் அத்தாட்சி பிறப்பித்து கைப்ற்றினார். எதிரி ரவியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட 25 போலி 500 ரூபாய் நோட்டுகள் என்னிடம் காட்டப்படுவதுதான். அது அசாஆ 19 வரிசை எண்ணிக்கை 25 ஆகும். ஆய்வாளர் பிறப்பித்த 2 அத்தாட்சிகள் என்னிடம் காட்டப்படுவதுதான். பின்பு எதிரிகள் இருவரையும், மற்றும் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் இருவரையும் அழைத்து கொண்டு காலை 10 மணிக்கு காவல் நிலையம் வந்தோம்.

பின் மறுபடியும் 10.15 மணிக்கு காவல்நிலையத்தில் இருந்து நான், ஆய்வாளர், தலைமைக்காவலர் சிவக்குமார் மற்றும் சாட்சிகள் கில்பெர்ட்ராய், மகேந்திரன் ஆகியோர்கள் குன்னூர் வண்டிப்பேட்டை

போஸ் ஸ்டுடியோவின் உரிமையாளர் தேவதாஸ் என்பவரை காரணம் கூறி விசாரித்து 10.30 மணிக்கு ஆய்வாளர் அவரை கைது செய்தார். அப்போது நான் உடன் இருந்தேன். அவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அவரிடம் இருந்து 44 போலி 500 ரூபாய் கள்ள நோட்டுகளை ஆய்வாளர் அவர்கள் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார். அந்த 44 போலி 500 ரூபாய் நோட்டுகள் அசாஆ 20 ஆகும். அந்த அத்தாட்சி என்னிடம் காட்டப்படுவதுதான். அந்த அத்தாட்சியில் கில்பெர்ட்ராய் மற்றும் மகேந்திரன் ஆகியோர் கையெழுத்து இட்டனர். கைப்பற்றி பிறகு மேற்படி நோட்டுகளை எவ்வாறு தயாரித்தீர்கள் என்று கேட்டபோது கம்யூட்டர், ஜெராக்ஸ் மிஷின், கட்டர் மிஷின் பயன்படுத்தி நோட்டுகளை தயாரித்தாகவும் கூறி அந்த கம்ப்யூட்டர் மற்றும் பிரிண்டர், கட்டர்மிஷின், கீபோர்டு, மௌஸ் ஆகியவற்றை எடுத்து ஆஜர்படுத்தினார். அந்த கம்யூட்டர், கீபோர்ட், பிரிண்டர், சிபியூ, கட்டர்மிஷின், மௌஸ், எல்ஜி மானிட்டர் ஆகியவை ஏற்கனவே சாபொ2 ல் இருந்து சாபொ9-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின் அங்கிருந்து ஆய்வாளருடன் எதிரி தேவதாஸ் என்பவரை அழைத்துக்கொண்டு காவல் நிலையத்திற்கு வந்தோம். மேலும் அவரை காவல் நிலையத்தில் ஒப்படைத்து விட்டு பிரவு ( எ) சலீம் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தின் படி பாலன் பாரிற்கு சென்று விசாரித்தபோது பார் உரிமையாளர் பாலன் என்பவர், கள்ளநோட்டு கொடுத்தது உண்மை என்றும் அந்த நபர் தப்பித்து போய்விட்டார் என்றும் கூறி ஒரு போலி 500 ரூபாய் நோட்டை ஆய்வாளரிடம் ஒப்படைத்தார். ஒப்பைடத்தார். அதை ஆய்வாளர் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார். அந்த போலி 500 ரூபாய் நோட்டு என்னிடம் காட்டப்படுவதுதான். அது ஏற்கனவே சாபொ10-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆய்வாளர் பிறப்பித்த அத்தாட்சி என்னிடம் காட்டப்படுவதான். அதில் கில்பெர்ட் ராய் மற்றும் மகேந்திரன் கையெழுத்து இட்டுள்ளார்கள். பின் அங்கிருந்து நேராக காவல்நிலையம் வந்தோம். அங்கு வைத்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1-ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

மகேந்திரன், கில்பெர்ட் ராய் வாக்குமூலத்தை நான் தட்டச்சு செய்யவில்லை, ஆய்வாளர்தான் தட்டச்சு செய்தார். ஆய்வாளர் சாலை ராம் சக்திவேல் என்னை 19.01.2017 அன்று விசாரித்தார். வழிப்பறி சம்பவம் 04.03.2016 அன்று நடந்தது. ஆய்வாளர் என்னை விசாரிக்கும்போது 04.04.2016 அன்று சம்பவம் நடந்ததாக நான் சொல்லவில்லை. சாபொ1, 15 மற்றும் அசாஆ 18-ஐ ஆஜர்படுத்தும் போது கில்பெர்ட் ராய், மகேந்திரன் உடன் இருந்தார்கள். சாட்சிகளின் வாக்குமூலம் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் தனது லேப்டாப்பில் டைப் செய்தார். ஆய்வாளர் தட்டச்சு செய்ததை எங்க வைத்து பிரிண்ட் எடுத்தீர்கள் என்றால் ஆய்வாளர் தட்டச்சு செய்து பென்டிரைவில் கொடுத்தார் அதை நாங்கள் பக்கத்தில் போய் பிரிண்ட் அவுட் எடுத்து கொடுத்து கையெழுத்து வாங்கினோம். பிரிண்ட் எடுத்த இடம் குறித்து என்னுடைய வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை. பார் உரிமையாளர் பாலனிடம் பணம் கைப்பற்றும் போது எந்த பொதுமக்களிடமும் கையெழுத்து பெறவில்லை. பார் உரிமையாளரிடம் இருந்து கைப்பற்றப்பட்டட 500 ரூபாய் நோட்டிலும், எதிரி மனேஷ்குமார் என்பவரிடம் இருந்து எதிரி வழிப்பறி செய்ததாக சொல்லாப்படும் நோட்டிற்கும் ஏதேனும் வேறுபாடு உள்ளதா என்றால் ஒன்று 500 ரூபாய் நோட்டு மற்றொன்று 1000 ரூபாய் நோட்டு. எதிரியிடம் இருந்தோ, பார் உரிமையாளரிடம் இருந்தோ எந்த ரூபாய் நோட்டுகளும் நாங்கள் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. 1--ம் எதிரி மீது ஜானு பிரியா என்பவர் கொடுத்த புகாரில் அவர் மீது வழக்கு நடந்து அவர் விடுதலை செய்யப்பட்டார் என்றால் சரிதான். நான் சொன்னது போல் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும் எதிரி எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும் அவரிடம் இருந்து எந்த சான்று பொருட்களும். சான்றாவணங்களும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி சான்றாவணம் மற்றும் சான்று பொருட்கள் அனைத்தும்

காவல்நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டது என்றால்சரியல்ல. (மதிய உணவு இடைவேளைக்காக 2 மற்றும் 3-ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது )

**2 -வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

ஆய்வாளர் வரச்சொன்னபோது நானும், சிவக்குமாரும் காரில் சென்றோம் ஆய்வாளர் அவரது ஜீப்பில் வந்தார். எங்கு தேடுதலை ஆரம்பித்தோம் என்றால் கரன்ஜி என்ற இடத்தில் இருந்து தேட ஆரம்பித்தோம். கரன்ஜி என்ற இடத்திற்கும் வண்டிச்சோலைக்கும் இடையில் சுமார் 7 கிமீ தூரம் இருக்கும். சாட்சிகளை எங்கு வைத்து பார்த்தேன் என்றால் ஆய்வாளர் விசாரிக்கும் போது பார்த்தேன். சாட்சிகள் எங்களுடன் வந்தார்களா என்றால் ஆம்.

வண்டிப்பேட்டைக்கும் காவல்நிலையத்திற்கும் சுமார் 2 கிமீ தூரம் இருக்கும். போஸ் ஸ்டுடியோ இருக்கும் இடம் நெருக்கடியான இடம் என்றால் சரிதான். நிறைய கடைகள் அங்கு உள்ளது என்றல் சரிதான். அது வண்டிகள் நிறுத்தும் இடம் என்றால் சரிதான். அங்கு அம்மா உணவகம் உள்ளது என்றால் சரிதான். அந்த பகுதியில் இருந்த பொதுநபர்கள் யாரையாவது சாட்சியாக ஆய்வாளர் அழைத்தாரா என்றால் இல்லை. போஸ் ஸ்டுடியோவின் இருபுறமும் கடைகள் உள்ளது என்றால் ஆம் அங்கிருந்தும் எந்த சாட்சிகளையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். போஸ் ஸ்டுடியோவில் எத்தனை அறைகள் இருந்தது என்றால் 2 அறைகள் இருந்தன. ஒவ்வொரு அறையிலும் என்னென்ன இருந்தது என்றால் தற்போது ஞாபகம் இல்லை. கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருட்கள் அனைத்தும் எந்த அறையில் இருந்தது என்றால் உள் அறையில் இருந்தது. பணம் அந்த அறையில் இருந்துதான் எடுக்கப்பட்டது. போஸ் ஸ்டுடியோவில் ஆய்வாளர் ஒரே மகஜர்தான் தயார் செய்தார். நான் ஆய்வாளருடன் சென்ற போது ஏதேனும் ஆவண்ஙகளில் கையெழுத்து இட்டேனா என்றால் இல்லை. 2-வது எதிரி தேவதாஸ் எந்த

ஆவணத்திலாவது கையெழுத்து இட்டாரா என்றால் ஞாபகம் இல்லை. மகஜரை ஆய்வாளர்தான் எழுதினார். 2-வது எதிரியின் கடைக்கு எவ்வாறு போனோம் என்றால் ஆய்வாளர் சாட்சிகளுடன் ஜீப்பில் சென்றார். நானும் சிவக்குமாரும் அவருடைய காரில் சென்றோம். ஒப்புதல் வாக்குமூலம் எத்தனை மணிக்கு கொடுக்கப்பட்டதாக அதில் எழுதப்பட்டுள்ளது என்றால் 10.30 மணிக்கு சொன்னதாக எழுதப்பட்டுள்ளது. என்னுடைய பணி குறித்து காவல்நிலைய பொதுநாட்குறிப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆய்வாளருடன் சென்றதற்கான காவல் நிலைய பொது நாட்குறிப்பு உள்ளது.

நான் சொல்வது போல், சொன்னநேரத்தில், சொன்ன இடத்தில் 2-வது எதிரியின் ஸ்டுடியோவிற்கு நாங்கள் செல்லவில்லை என்றாலும் சான்று பொருட்கள் மற்றும் சான்றாவணங்கள் கைப்பற்றப்படவில்லை என்றாலும் அவர் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்லல. ஆய்வாளர் சிவக்குமார் ஒரே ஒருநாள்தான் பணியில் இருந்தார். இந்த வழக்கு சம்மந்தமாக அவர் எந்த சாட்சியையாவது விசாரித்தாரா என்றால் எனக்கு ஞபாகம் இல்லை. என்னை விசாரித்தாரா என்றால் என்னை ஆய்வாளர் சிவக்குமார் விசாரிக்கவில்லை, நான் சொன்னது போல், சொன்னநாளன்று புலன் விசாரணையில் நான் உடன் இருக்கவில்லை என்றாலும் புலன் விசாரணைக்கு உதவியாக இருந்ததாக பின்னிட்டு நான் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>3-வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

3-வது எதிரியின் வீட்டிற்கு சென்றுதான் அவரை கைது செய்தோம் என்றால் சரிதான். அவரை கைது செய்ததற்காக அவரிடம் இருந்து ஏதேனும் கையெழுத்து பெற்றோமா என்றால் இல்லை. அவரை கைது செய்த இடத்தில் இருந்து, அந்த பகுதியில் இருந்த நபர்கள் யாரையும் விசாரிக்கவில்லை. கைப்பற்றதல் மகஜரில் எதிரியின் வீட்டு கதவு எண் எழுதப்பட்டிருந்ததா என்றால் ஞாபகம் இல்லை. அந்த பகுதியின்

குறிப்பிட்ட அடையாளம் குறித்து கைப்பற்றதல் மகஜரில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரிக்கு பணம் யாரால், எதற்காக எங்கு வைத்து கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சலீம் என்பவர் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது. எப்போது கொடுத்ததாக சொல்லப்படவில்லை. சொன்ன நாள், சொன்ன நேரத்தில் மற்ற எதிரிகளிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றாலும் சான்று பொருட்கள், சான்றாவணங்கள் எதுவும கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

Sd/. Thiru. A. Abdul Kadhar,
District Judge, Udhagamandalam

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII of Code of Criminal Procedure)
IN THE COURT OF SESSIONS JUDGE OF THE NILGIRIS
AT UDHAGAMANDALAM

| | | |
|---|---|---|
| **Sessions .. ..** | **:** | **S.C.No. 50 of 2017** |
| **Deposition of witness for** | **:** | **PW- 8 (L.W- 8)** |
| **Name** | **:** | **திரு. சிவக்குமார்** |
| **Father's/Husband Name** | **:** | |
| **Age** | **:** | |
| **Address** | **:** | |
| | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873**

**17.07.2023**

A1, A2, A3 Present.

**முதல் விசாரணை**

நான் தற்போது சிபிசிஐடி சிறப்பு புலனாய்வு பிரிவில் தலைமைகாவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2016-ம் வருடம் அருவங்காடு காவல் நிலையத்தில் நான் தலைமைக்காவலராக பணி செய்தபோது அயல் பணியாக குன்னூர் குற்ற தடுப்பு பிரிவில் பணி செய்து வந்தேன். மேல்குன்னூர் காவல் நிலைய குற்ற எண் 37/2016 பிரிவு 397 இதச வழக்கில் புலன் விசாரணைக்கு ஆய்வாளருக்கு உதவி செய்வதற்காக என்னையும், சிறப்பு உதவி ஆய்வாளர் ரவி என்பவரையும் ஆய்வாளர் உடன் அழைத்து சென்றார். ஆய்வாளருடன் நாங்கள் 05.03.2016 அன்று அதிகாலை 5 மணிக்கு குன்னூர் வண்டிச்சோலை ஜங்சனில் தகவலாளி அடையாளம் காட்ட ஒரு நபரை ஆய்வாளர் பிடித்து விசாரித்தார். அவரை

விசாரித்தபோது அவர் தனது பெயர் பிரபு என்ற சலீம் என்று சொன்னார். மேலும் அவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதை காவல் ஆய்வாளர் தனது மடிக்கணினியில் பதிவு செய்தார். பின் அது பென்டிரைவில் காப்பி செய்யப்பட்டு பிரிண்ட் எடுக்கப்பட்டு எதிரி பிரபு (எ) சலிமிடம் கையெழுத்து பெற்றார். அதில் சாட்சி கில்பெர்ட் ராய், கிராம நிர்வாக அதிகாரி மற்றும் மகேந்திரன் ஆகியோர் கையெழுத்து இட்டனர்.

பின் அவர் ஒப்புதல் வாக்குமூலத்தில் சொன்னபடி அவரிடம இருந்து ஒரு சிறிய கத்தி, 1000 ரூபாய் பணம் மற்றும் 24 போலி 500 ரூபாய் நோட்டுகள் ஆகியவை அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்டது. அதை ஆய்வாளர் அத்தாட்சி பிறிப்பித்து மேற்படி சாட்சிகள் கில்பெர்ட்ராய், மகேந்திரன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றினார். அந்த கத்தி ஏற்கனவே சாபொ11 ஆகவும், 24 போலி 500 ரூபாய் கள்ள நோட்டுகள் சாபொ18-ஆகவும், 1000 ரூபாய் நோட்டு சாபொ1- ஆகவும் எற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் ஆய்வாளர் மேற்படி பொருட்களை கைப்பற்றினார்.

பின் அங்கிருந்து புறப்பட்டு பிரபு என்ற சலிமுடன் உதகை ஆரணி அவுஸ் என்ற இடத்திற்கு சென்றோம். அங்கு பொட்டானிக்கல் கார்டனில் இருக்கும் போட்டோகிராபர் ரவி என்பவரை சலிம் அடையாளம் காட்ட ஆய்வாளர் அவரையும் விசாரித்து அவரையும் கைது செய்தார். பின்பு அவர் வீட்டில் இருந்த அவர் எடுத்து ஆஜர் செய்த 25 போலி 500 ரூபாய் கள்ள நோட்டுகளை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் மூலமாக சாட்சிகள் கில்பெர்ட் ராய் மற்றும் மகேந்திரன் முன்னிலையில் கைபபற்றினார். அ ந்த மகஜர் என்னிடம் காட்டப்படுவதுதான். அந்த 25 போலி கள்ளரூபாய் நோட்டுகள் ஏற்கனவே ஏற்கனவே அசாஆ 19-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின் அங்கிருந்து 2 எதிரிகளுடன் காவல் நிலையம் வந்து அவர்களை காவல் நிலைய பாராவில் ஒப்படைத்தோம். பின்பு பிரபு (எ) சலீம் கொடுதத ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 10.30 மணிக்கு

வண்டிப்பேட்டையில் உள்ள போஸ் ஸ்டுடியோ சென்று அதன் உரிமையாளர் தேவதாஸ் என்பவரை ஆய்வாளர் விசாரித்தார். அவரும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அவர் தான்தான் கள்ளநோட்டுகளை காப்பி எடுத்து பிரபு என்ற சலிமிடம் தான்தான் கொடுத்ததாக ஒப்புக்கொண்டார்.(மேற்படி சாட்சியத்தின் ஏற்புத்தன்மை குறித்து எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனை செய்தவால் அந்த ஆட்சேபனை பதிவு செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.) ஆய்வாளர் எதில் பிரிண்ட் செய்தீர்கள் என்று கேட்டார். அரதற்கு அவர் அங்கிருந்த இண்டெல் கம்யூட்டர் மற்றும் பிரிண்டர், கட்டிங் மிஷின், எப்சன் பிரிண்டர் ஒன்று ஆகியவற்றை அடையாளம் காட்ட அதை ஆய்வாளர் அத்தாட்சி பிறப்பித்து அதே சாட்சகிள் முன்னிலையில் கைப்பற்றினார். அந்த கம்பூயட்டர் மற்றும் பிரிண்டர், சிபியூ, கீபோர்டு, மௌஸ், கட்டிங் மிஷின் ஆகியவை சாபொ2 முதல் சாபொ9-ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அவை தற்போது என்னிடம் காட்டப்படுவதுதான். மேலும் அவர் தன்னிடம் வைத்திருந்த 45 கள்ள ரூபாய் நோட்டுகளை ஆய்வாளர் வசம் ஒப்புவித்தார். அதை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார். அந்த 45 கள்ள ரூபாய் நோட்டுகள் சாபொ20-ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கைப்பற்றியதற்கான அத்தாட்சிகள் தற்போது என்னிடம காட்டபப்டுவதுதான். பின்பு தேவதாஸை அழைத்துகொண்டு காவல் நிலையம் சென்று அவரை காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம். பின்பு ஏற்கனவே பிரபு (எ) சலீம் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் குன்னூர் மவுண்ட் ரேராட்டில் இருக்கும் பாலன் என்பவரின் பாருக்கு 13.00 மணிக்கு சென்று அங்கிருந்த 500 ரூபாய் போலி கள்ளநோட்டுகளை அதே சாட்சிகள் முன்னிலையில் ஆய்வாளர் கைப்பற்றினார் அந்த 500 ரூபாய் கள்ள நோட்டு சாபொ10-ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி எதிரிகளை கைது செய்வதற்கும் புலன் விசாரணைக்கும் ஆய்வாளருக்கு

நான் உதவியாக இருந்தேன். இது சம்மந்தமாக 19.01.2017-ம் தேதி என்னை ஆய்வாளர் திரு. சாலை ராம் சக்திவேல் விசாரித்தார்

**1-வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நானும், சிறப்பு உதவி ஆய்வாளர் ரவி என்பவரும் வண்டிச்சோலை என்ற இடத்திற்கு சென்றோம். நான் அன்று பணியில்தான் இருந்தேன். நாங்கள் 2 பேர்தான் சென்றோம் என்றால் ஏற்கனவே சாட்சிகள் ஆய்வாளருடன் வண்டிச்சோலைக்கு வந்திருந்தார்கள். சாட்சிகளின் வாக்குமூலம் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தை யார் தட்டச்சு செய்தார்கள் என்றால் தட்டச்சு செய்வதற்காக ஆய்வாளருடன் ஒருவர் வந்தார். அவர் எங்கள் காவல்நிலையத்தில் உள்ளவர்தான் அவர்பெயர் ஞாபகம் இல்லை. ஒப்புதல் வாக்குமூலம் எதிரிகளை கைது செய்த இடத்தில் வைத்து தட்டச்சு செய்யப்பட்டது. எங்கு வைத்து பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்டது என்றால் பென்டிரைவில் போட்டு கொடுத்து விடப்பட்டு பின் பக்கத்தில் போய் பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்டது.

1-வது எதிரியை கைது செய்யும் போது காலை 5 மணி இருக்குமா என்றால் இருக்கும். அந்த நேரத்தில் வேறு எந்த கடையும் திறந்திருக்காது என்றால் சரிதான். பிரபு என்ற சலிம் தான் வழிப்பறி செய்ததாக சொல்லப்படும் சம்பவம் எந்த தேதியில் நடந்ததாக சொன்னார் என்றால் நாங்கள் அவரை கைது செய்வதற்கு முந்தைய நாள் நடந்ததாக சொன்னார். சம்பவம் 04.03.2016-ம் தேதி நடந்ததாக சொன்னார். நான் என்னை ஆய்வாளர் விசாரிக்கும் போது 04.04.2016 அன்று சம்பவம் நடந்ததாக சொல்லி உள்ளேன் என்றால் அது தவறாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. முதல் எதிரியிடம் இருந்து 1000 ரூபாய் நோட்டை கைப்பற்றும்போதும், பாலன் என்பவரிடம் இருந்து ஒரு 500 ரூபாய் நோட்டை கைப்பற்றும் போதும் ஆய்வாளருடன் நான் உடன் இருந்தேன். பாலனிடம் இருந்து மதியம் 1 மணிக்கு அந்த ஒரு 500 ரூபாய் கள்ளநோட்டு கைப்பற்றப்பட்டது

என்றால் சரிதான். பார் திறந்திருந்தது, கூட்டம் அதிகமாக இருந்தது என்றால் சரிதான். கிலிபெர்ட்ராய், மகேந்திரனை தவிர வேறு எந்த பொதுமக்களிடமும் சாட்சி கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். நான் சொன்னது போல், சொன்ன நேரத்தில், எதிரியை கைது செய்யவில்லை என்றும் ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றும், சான்றாவணம் மற்றும் சான்று பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சான்று பொருட்கள் மற்றும் சான்றாவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் ஒரே காவல் நிலையத்தில் பணிபுரிவதால் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆய்வாளருடன் புலன் விசாரணையில் நான் உடன் இருந்ததாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>2 -வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னை ஆய்வாளர் அழைக்கும் போது நான் காலை என் வீட்டில்தான் இருந்தேன். நானும், சிறப்பு உதவி ஆய்வாளர் ரவியும் ஒரே குடியிருப்பில்தான் இருக்கிறோம். நான் பணிக்கு சென்றதாக எங்களுடைய காவல் நிலைய பொதுநாட்குறிப்பில் பதிவு ஏதும் உள்ளதாக என்றால் இல்லை. என்னுடைய கைக்குறிப்பேட்டில் அதை பதிவு செய்தேனா என்றால் நாங்கள் குற்றப்பிரிவில் இருப்பதால் கைக்குறிப்பேடு பராமரிக்கவில்லை. கைக்குறிப்பேடு வைத்திருக்க வேண்டுமா என்றால் நாங்கள் சட்டம், ஒழுங்கு பிரிவில் இருக்கும் போது தினமும் பணி ஒதுக்கப்படும். ஆனால் குற்றப்பிரிவில் இருக்கும் போது தினமும் பணி ஒதுக்கப்படாது. அதனால் கைக்குறிப்பேடு பராமரிக்கப்படவில்லை. வண்டிப்பேட்டை போஸ் ஸ்டுடியோ போகும் போது எதிரிகள் யாரும் எங்களுடன் வரவில்லை. வண்டிப்பேட்டை ஸ்டுடியோவை சுற்றி நிறைய கடைகள் இருந்தது என்றால் சரிதான் அங்கு ஒரு வங்கி உள்ளது என்றால் சரிதான் அதற்கு முன்பு அம்மா உணவகம் உள்ளது என்றால் சரிதான்

அங்கு நிறைய வாகனங்கள் நிறுத்தப்பட்டிருக்கும் என்றால் சரிதான்.. போஸ் ஸ்டுடியோ இருக்கும் கட்டிடம் 3 மாடி கட்டிடம், அதில் முதல் மாடியில் போஸ் ஸ்டுடியோ உள்ளது. அந்த கட்டிடத்தின் கீழ்தளத்தில் என்ன நிறுவனம் உள்ளது என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. போஸ் ஸ்டுடியோவில் எத்தனை அறைகள் இருந்தது என்றால் 2 அறைகள் இருந்ததாக ஞாபகம். ஒரு அறைக்கும், மற்றொரு அறைக்கும் இடையில் சுவர் இருந்ததா அல்லது தடுப்பு இருந்ததா என்றால் தடுப்பு இருந்ததாக ஞாபகம். ஸ்டுடியோவில் டார்க் ரூம் இருந்ததா என்றால் ஞாபகம் இல்லை. எந்த அறையில் இருந்து பொருட்கள் எடுக்கப்பட்டது என்றால் அவரது அலுவலக அறை போல் இருந்த இடத்தில இருந்து பொருட்கள் எடுக்கப்பட்டது. அது மிகவும் நெருக்கடி உள்ள இடமாக இருந்தபோதிலும் அந்த பகுதியில் இருந்த நபர்கள் யாரையும் சாட்சியாக ஆய்வாளர் அழைத்தாரா என்றால் இல்லை. நான் ஆய்வாளரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் கில்பெர்ட்ராயும், மகேந்திரனுடன் என்னுடன் வந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான் சாட்சிகள் என்று மட்டும்தான் சொல்லிஉள்ளேன்.

ஆய்வாளர் போஸ் ஸ்டுடியோவில் தயாரித்த ஆவணத்தில் எதிரி கையெழுத்து இட்டார். ஆய்வாளர் தயாரித்த எந்த ஆவணத்திலும் நான் கையெழுத்து இடவிலலை என்றால் சரிதான். மகஜரை யார் தயார் செய்தார்கள் என்றால் ஆய்வாளர்தான் தயார் செய்தார். மகஜர்கள் ஏற்கனவே தயார் செய்யப்பட்ட படிவங்கள் அதை நாங்கள் ஏற்கனவே எடுத்து சென்றோம் அதில் யார் எழுதினார் என்றால் ஆய்வாளர்தான் எழுதினார். ஆய்வாளர் மடிக்கணினியில் தட்டச்சு செய்தார். அதை பென்ட்டிரைவில் காப்பி செய்து பிரிண்ட் எடுத்து வரப்பட்டது என்ற விவரத்தை ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

எதிரி தேவதாஸ் ரூபாய் நோட்டுகளை ஜெராக்ஸ் எடுப்பதற்காக

அவருடைய கம்யூட்டரை உபயோகப்படுத்தியதாக நான் ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 2-ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் எத்தனை மணி என்று போடப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. போஸ் ஸ்டுடியோவில் 2 மகஜர்கள் தயாரிக்கப்பட்டது. 2-ம் எதிரியின் ஸ்டுடியோவிற்கு நானும், சிறப்பி உதவி ஆய்வாளர் ரவியும் எனது காரில் சென்றோம் ஆய்வாளர் சாட்சிகளுடன் ஜீப்பில் வந்ததார். நான் ஆய்வாளருடன் சென்று எதிரியை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றாலும் சான்றாவணம் மற்றும் சான்று பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சான்று பொருட்கள் மற்றும் சான்றாவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதனால்தான் 10 மாதங்கள் கழித்து என்னை விசாரித்ததாக ஆவணங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**3-வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி ரவி ஏதேனும் ஆவணங்களில் கையெழுத்து இட்டாரா என்றால் இல்லை. ரவியிடமிருந்து பொருட்கள் கைப்பற்றும் போது தயார் செய்யப்பட்ட கைப்ற்றுத்ல மகஜரில் அவரது முகவரி இருந்ததா என்றால் அவருடைய வீடு என்று காட்டப்பட்டுள்ளது. அதில் அவரது வீட்டின் கதவு எண் சொல்லப்படவில்லை. எதிரி ரவியின் வீட்டிற்கு அருகில் வீடுகள் இருந்தது. அங்கு இருந்த பொது நபர்கள் யாரிடமும் சாட்சி கையொப்பம் பெறவில்லை. ரவி கள்ளநோட்டுகளை எங்கிருந்து, எந்த இடத்தில் இருந்து எடுத்து ஆஜர்செய்தார் என்று எனது வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் வீட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்தததாக சொல்லிஉள்ளேன்.

எதிரி ரவியிடம் எப்போது கள்ள நோட்டுகள் அவர் கைக்கு போனது என்றும் யாரால் எப்போது கொடுக்கப்பட்டது என்று தெரியுமா என்றால் 1-வது எதிரிதான் கொடுத்ததாக அவரது ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறி உள்ளார். ஆனால் எப்போது . எங்கு வைத்து கொடுத்தார் என்று தெரியாது.

நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் 3-வது எதிரியிடம் இருந்து எந்த பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. உயர் அதிகாரி சொன்னதன் பேரில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

**இல்லை**

Sd/. Thiru. A. Abdul Kadhar,
District Judge, Udhagamandalam